[2014 ஆகஸ்ட் 4

ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்த பிறகுதான் இவ்வளவு பெரிய நிலையை உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொன்விழா ஆண்டை நோக்கி நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே 1,893 படுக்கைகளைக் கொண்டதாக இன்றைக்கு நிலை உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து அனைத்து எதிர்க்கட்சிகளும் அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவில் அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒற்றுமையாக, ஒருமித்த கருத்துகளுடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பின் நின்று, ஒத்த கருத்தைத் தெரிவித்ததன் அடிப்படையில், தமிழகத்தின் ஒட்டுமொத்தக் கட்சிகளின் எதிர்ப்புக்குப் பணிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் இலங்கை அரசு மன்னிப்புக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இது குறித்து மேலும் விவாதம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*